| |
|---|
| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai |
| Date: 16.02.2026 |
| CC No. 135/2022 |
| சாட்சி : PW1 |

| | |
|---|---|
| பெயர் : திரு. பூமிநாதன் | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு. நல்லுச்சாமி | தொழில் : மாணவர் |
| கிராமம் : சீகம்பட்டி | சமயம் : |
| தாலுக்கா : மணப்பாறை | வயது : 21/2026 |
| ( எதிரி ஆஜர் , வழக்கறிஞர் ஆஜர்) | |

---

**அரசு தரப்பு முதல் விசாரணை**

1. நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன்.28.09.2020 அன்று நானும், எனதுதாத்தா சுப்பையாவும் ஸ்கூட்டி இருசக்கரவாகனத்தில் சீகம்பட்டியிலிருந்து துவரங்குறிச்சிக்கு சென்றோம். இந்த வாகனத்தை நான்தான் ஓட்டினேன். மதுரை – திருச்சி பைபாஸ் ரோட்டில் துவரங்குறிச்சி ஹைமால் லைட்கம்பம் அருகே மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி திரும்பும்போது திருச்சியிலிருந்த வந்த கார் ஒன்று எங்கள் வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டது. எனக்கு இடது தோள்பட்டையில் காயம் ஏற்பட்டது. எனது தாத்தாவிற்கு காலிலும், கையிலும் காயம் ஏற்பட்டது. எனக்கு சுயநினைவு இல்லை. என்னை முதலில் துவரங்குறிச்சி அரசு மருத்துவமனைக்கும் மேல் சிகிச்சைக்காக திருச்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுப்பி வைத்தார்கள். எனது தாத்தா மருத்துவமனைக்கு வரும் வழியில் இறந்துவிட்டதாக கேள்விபட்டேன். விபத்து ஏற்படுத்திய நபர் யார் என்று எனக்கு தெரியாது. ஆஜர் எதிரியை தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கின் புகார்தாரர் எனது சித்தப்பா. அவர் தற்போது வெளிநாட்டில் வேலை செய்கிறார். போலீசார் என்னை விசாரித்தார்கள் என்று ஞாபகமில்லை.

**சாட்சி அரசு தரப்பு சாட்சி பகுதியாக அரசு தரப்பு சாட்சியத்தை அனுசரித்து சாட்சியம் அளிக்கவில்லை என்பதால் அரசு தரப்பில் குறுக்கு விசாரணைக்கு அனுமதி கோரப்பட்டு அனுமதிக்கப்படுகிறது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

2. மேற்படி சம்பவத்தில் ஆஜர் எதிரி TN 49 CV 2882 HYUNDAI VENUE CAR ஐ அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து TN 55 AJ 8438 என்ற பதிவெண் கொண்ட நான் ஓட்டி வந்த இருசக்கரவாகனத்தின் மீது மோதிவிபத்து ஏற்படுத்தியதாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken over by me in open court read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.

| |
|---|
| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai |
| Date: 16.02.2026 |
| CC No. 135/2022 |
| சாட்சி : PW2 |

| | |
|---|---|
| பெயர் : திரு. வெள்ளையன் | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு. அப்பாவு | தொழில் : விவசாயம் |
| கிராமம் : சீகம்பட்டி | சமயம் : |
| தாலுக்கா : மணப்பாறை | வயது : 63/2026 |
| ( எதிரி ஆஜர் , வழக்கறிஞர் ஆஜர்) | |

-------------------------------------------------------

**அரசு தரப்பு முதல் விசாரணை**

1. நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும், எங்கள் ஊர்க்காரர். ஆஜர் எதிரியை பார்த்ததில்லை. சுமார் 5 வருடத்திற்கு முன்பு காலை 11.00 மணியளவில் துவரங்குறிச்சி பைபாஸ் ஹைமால் லைட்கம்பம் அருகே விபத்து ஏற்பட்டு பூமிநாதனுக்கு சுயநினைவின்றி காயம்பட்டு கிடந்தார். சுப்பையா உயிர் துடித்து கொண்டிருந்தது. ஒருகாலில் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. காரும், இருசக்கரவாகனம் மோதி விபத்து ஏற்பட்டிருந்தது. காரை ஓட்டிய நபர் விபரங்கள் குறித்த விபரங்கள் எனக்கு எதுவும் தெரியாது.

**சாட்சி அரசு தரப்பு சாட்சி பகுதியாக அரசு தரப்பு சாட்சியத்தை அனுசரித்து சாட்சியம் அளிக்கவில்லை என்பதால் அரசு தரப்பில் குறுக்கு விசாரணைக்கு அனுமதி கோரப்பட்டு அனுமதிக்கப்படுகிறது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

2.மேற்படி சம்பவத்தில் கடந்த 28.09.2020 அன்று ஆஜர் எதிரி TN 49 CV 2882 HYUNDAI VENUE CAR ஐ அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து TN 55 AJ 8438 என்ற பதிவெண் கொண்ட நான் ஓட்டி வந்த இருசக்கரவாகனத்தின் மீது மோதிவிபத்து ஏற்படுத்தி அதில் சுப்பையா என்பவர்

இறந்துவிட்டதாகவும், பூமிநாதனுக்கு காயம்ஏற்பட்டதாகவும் சம்பத்தை நேரில் பார்த்தாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken over by me in open court read over to the witness and admitted by the witness to be correct.

Sd/–R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.